சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 88/2015

பெயர் திரு. கோவர்த்தனன் த/பெ. மதுரை முதலியார் நாள்.27.08.2024

<u>வாதி சாட்சி 2 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>

1. முதல் விசாரணை வாக்குமூலத்தில் வாதியின் பிரமாண வாக்குமூலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எனது முகவரியாக தின்னலூர் கிராம முகவரியை கொடுத்துள்ளேன். நான் கடந்த 30 வருடங்களாக சென்னை, கண்ணகி நகரில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய குடும்ப அட்டையில் என்ன முகவரி உள்ளது என்றால் தின்னலூர் முகவரிதான் உள்ளது. என்னுடைய ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை சென்னை கண்ணகி நகர் முகவரியில் உள்ளது. நான் கண்ணகி நகரில்தான் வாக்கு செலுத்துகிறேன் என்றாலும் அங்குதான் வசித்து வருகிறேன் என்றாலும் சரியல்ல.

2. வாக்காளர் அடையாள அட்டையில் என்ன முகவரி உள்ளதோ அங்குதான் வாக்களிக்க முடியும் என்றால் சரிதான். நான் தின்னலூர் கிராமத்தில் வசித்ததில்லை என்றாலும் நான் வழக்கிற்காக வசித்து வருவதாக கூறுகிறேன் என்றாலும் சரியல்ல. வாதி என்னுடைய சகோதர். பிரதிவாதி ஜெயா குரோம்பேட்டையில் குடியிருந்து வருகிறார். பிரதிவாதி ஜெயாவிற்கு எப்பொழுது திருமணம் ஆனது என்றால் 1989 ற்கு முன்பு திருமணம் ஆனது. அவருக்கு 4.12.1989 அன்று திருமணம் நடந்தது என்றால் சரியல்ல. ஜெயாவிற்கு எத்தனை பிள்ளைகள் என்றால் நான்கு பிள்ளைகள். ஜெயாவிற்கு எங்கு திருமணம் நடந்தது என்று தெரியாது. ஹரிகிருஷ்ணனுடன் உடன் பிறந்தவர்கள் மதுரை

மற்றும் சுந்தரம் ஆகியோர்கள். அவர்களுக்குள் பாகப்பிரிவினை ஏற்கனவே முடிந்து விட்டது. அந்த பாகப்பிரிவினையில் முதல் பிரதிவாதிக்கு எவ்வளவு ஒதுக்கப்பட்டது என்றால் 2 ஏக்கர் 70 செண்ட் ஒதுக்கப்பபட்டது. மீதம் உள்ள சொத்து 2 ஏக்கர் 30 சென்டை ஹரிகிருஷ்ணன் மற்றும் அவரது மகன்கள் வாங்கினார்கள். வா.த.சா.ஆ. 1 முதல் 5 ஆவணங்கள் ஹரிகிருஷ்ணன் பெயரில் வாங்கப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வா.த.சா.ஆ. 1 முதல் 5 ஆவணங்கள் ஹரிகிருஷ்ணனின் சுய வருமானம் மூலம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல.

3. முதல் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களைத் தவிர வேறு சொத்துக்களை முதல் பிரதிவாதி தனது மகன்கள் ரவி மற்றும் ஜானகிராமன் பெயரில் வாங்கியுள்ளார்கள் என்றால் அதுவும் கூட்டுக் குடும்ப சொத்துக்களாகும். அவ்வாறு 1990 மற்றும் 1993ல் முதல் பிரதிவாதி வாங்கிக் கொடுத்துள்ளார்கள் என்றால் அதுவும் கூட்டுக் குடும்ப சொத்தாகும். (27.6.1990 தேதியிட்ட கிரய ஆவணத்தின் இணையவழி நகல் மற்றும் 15.11.1990 தேதியிட்ட கிரய ஆவணத்தின் இணையவழி நகல் ஆகியவற்றை சாட்சியிடம் காண்பித்து மேற்கண்ட ஆவணங்கள் தான் ரவி மற்றும் ஜானகிராமன் பெயரில் உள்ள கிரய ஆவணங்கள் என்று சாட்சியிம் கேள்வி கேட்கப்பட்டது. அதற்கு சாட்சி அது கூடடுக் குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கப்பட்ட சொத்து என்று பதில் அளித்தார். பிரதிவாதியின் வழக்கறிஞர் மேற்கண்ட இரண்டு ஆவணங்களையும் சாட்சி மூலம் குறியீடு செய்ய வேண்டும் என வேண்டுகோள் வைத்தார். மேற்கண்ட இரண்டு ஆவணங்களிலும் சாட்சி தரப்பினர் கிடையாது என்றும், ஆவணங்களைப் பார்த்து கூட்டுக் குடும்ப வருவாயிலிருந்து சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று கூறியதாலும், அந்த ஆவணத்தை சாட்சி மூலம் குறியீடு செய்ய இயலாது என ஆட்சேபனை எழுப்பப்பட்டது. மேற்கண்ட இரண்டு ஆவணங்களும் நகல்கள் என்பதாலும், அவை பொது ஆவணம் என்பதாலும்,

சாட்சி அந்த ஆவணங்களின் தரப்பினர் இல்லை என்பதாலும், பிரதிவாதிகள் வழக்கறிஞரின் வேண்டுகோள் நிராகரிக்கப்படுகிறது). வாதிக்கு நான்கில் ஒரு பாகம் கொடுக்கவேண்டும் என்று கூறுகிறேன். யார் யாருக்கு நான்கு பாகங்கள் என்றால் ஹரிகிருஷ்ணன், ஜானகிராமன், ரவி மற்றும் ஜெயா. முதல் பிரதிவாதியின் பாகத்தை யாருக்கு வேண்டுமானாலும் எழுதிக் கொடுக்கலாம் என்றால் சரியல்ல.

4. வழக்குச் சொத்து சம்மந்தமாக வாதி, பிரதிவாதிகளுக்கிடையே பிரச்சனை இருந்துள்ளது. வாதி அது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளிதது முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டது என்றால் சரிதான். அதில் பிரதிவாதிகள் ரூ.5,00,000/— செலவு செய்து பிணையில் வந்தார்கள் என்றால் எவ்வளவு செலவு செய்து பிணையில் வந்தாரகள் என்று எனக்கு தெரியாது. ஆனால் பிணையில் வந்தார்கள். அவ்வழக்கு நிலுவையில் உள்ளது பற்றி எனக்கு தெரியும். அதைப்பற்றி வாதி என்னிடம் கூறியுள்ளார். வாதி மதுராந்தகம் வட்டம், அனந்தமங்கலம் அஞ்சல், தின்னலூர் கிராமத்தில் குடியிருந்து வருகிறார். வாதி குடியிருக்கும் வீடு முதல் பிரதிவாதி வாங்கிக் கொடுத்த வீடு என்றால் அது ஏக குடும்பத்தில் வாங்கப்பட்ட வீடு. அந்த வீடு கூட்டுக் குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கப்பட்ட கூட்டுக் குடும்ப சொத்தாகும். வாதி மற்றும் ஜானகிராமனுக்கு வாங்கிக் கொடுக்கப்பட்ட சொத்துக்கள் இவ்வழக்கில் சேர்க்கப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது.

5. வாதி, பிரதிவாதிகள் தனித்தனியே வாழந்து வருகிறார்கள் என்றும், தனித்தனியே சுய வருமானத்தில் வாங்கப்பட்ட சொத்துக்களை தனித்தனியே அனுபவம் செய்து வருகிறார்கள் என்றாலும் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதிகள் ஒரே வீட்டில் ஒரே சமையல் செய்து வருகிறார்களா என்றால் 10 வருடங்களாக அவ்வாறு இல்லை. வாதி மற்றும் பிரதிவாதிகள் தனித்தனியே வசித்து

வருகிறார்கள் என்றால் தற்பொழுதுதான் அவ்வாறு வசித்து வருகிறார்கள். வாதி பிரதிவாதிகள் தனித்தனியே வசித்து வருகிறார்கள் என்றாலும், அவர்கள் கூட்டுக் குடும்பமாக வசித்தது இல்லை என்றாலும் சரியல்ல. வாதி, பிரதிவாதிகளுக்கு இடையே வழக்கிற்கு முன்னர் சமரச பேச்சுவார்த்தை நடந்தது என்றால் எனக்கு தெரியாது.

6. வாதி, பிரதிவாதிகள் பிரச்சனைக்கு பிறகு வாய்மொழியாக பாகம் பிரித்து செட்டில்மென்ட் ஆவணங்கள் எழுதிக் கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. வாதி, பிரதிவாதிகள் வாய் மொழி பாகப்பிரிவினைக்கு பிறகு அவரவர் சொத்துக்களை அவரவர் அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. முதல் பிரதிவாதி தனது பாகத்தை 2, 3 பிரதிவாதிகளுக்கு செட்டில்மென்ட் எழுதி வைத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சங்கதிகள் எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் சரியல்ல. வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.